இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 171 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 18 – வியாழக்கிழமை 01 பிப்ரவரி 2024 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 171 : Thiruvalluvar Year - 2055 - Thai 18 - Thursday 01 February 2024 - Madurai 10 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, ரோக்கா நிறுவனத்தின் சர்வதேச இயக்குநர் Mr.Carlos Velazquez மற்றும் இந்திய இயக்குநர் நிர்மல் குமார் ஆகியோர், பெருந்துறையில் புதிய குழாய்கள் மற்றும் இணைப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவிடவும், இராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வது தொடர்பாகவும் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஆக்சியானா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டில் ஆக்சியானா நிறுவனம் மின் உற்பத்தி - நீர் சுத்திகரிப்பில் முதலீடு செய்கிறது!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஸ்பெயின் நாட்டு தொழில்துறையினர் சந்திப்பு!

## ரூ.400 கோடியில் ரோக்கா நிறுவனம் புதிய குழாய்கள் உற்பத்தி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்ய உறுதி!

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 1-**

**ஸ்பெயின் நாட்டின் முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சந்திப்பு நடத்தினர். ஆக்சியானா நிறுவனம் தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்தி, நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சி ஆகியவற்றில் முதலீடு செய்திட ஆர்வம் காட்டியுள்ளது. 400 கோடி ரூபாய் முதலீட்டில் ரோக்கா நிறுவனம் பெருந்துறையில் புதிய குழாய்கள் மற்றும் இணைப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவிடவும், இராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்யவும் உறுதி தெரிவித்துள்ளது.**

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசுமுறை பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு வருகை தந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு தொழில்துறை குழுமங்கள் மற்றும் முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் 29.1.2024 அன்று தொழில் முதலீட்டு மாநாட்டில் கலந்துரையாடினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஆக்சியானா நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் Mr. Rafael Mateo மற்றும் நீர் பிரிவு முதன்மை செயல் அலுவலர் Mr. Manuel Manjn Vilda ஆகியோர் தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்தி, நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சி ஆகியவற்றில் முதலீடு செய்வது குறித்து சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஆக்சியானா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஸ்பெயின் முன்னணி நிறுவன நிர்வாகிகள் சந்திப்பு!**

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (30.1.2024) ஸ்பெயின் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து பேசினார்கள். அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்திட வலியுறுத்தினார்கள்.

ஆக்சியானா நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் Mr. Rafael Mateo அவர்களும், Mr. Manuel Manjn Vilda, CEO Water Division அவர்களும் தமிழ்நாடு முதல்வர் அவர்களை சந்தித்து பேசினார்கள்.

இச்சந்திப்பின்போது, காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சியிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருவது குறித்தும், இத்துறையில் பல பெரும் முக்கிய நிறுவனங்கள் ஏற்கனவே தமிழ்நாட்டில் செயல்பட்டு வருவது குறித்தும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகளுக்கான தனிக்கொள்கை ஒன்றையும் வகுத்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது என்றும், எனவே இத்துறைகளில் சர்வதேச அளவில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாகிய ஆக்சியோனா நிறுவனத்தின் முதலீட்டிற்கு உகந்த இடமாக தமிழ்நாடு இருக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

**தமிழ்நாட்டில் முதலீடு குறித்து அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விளக்கம்!**

இத்துறையின் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விரிவாக விளக்கினார்கள். இந்த கலந்தாலோசனையில் முடிவில்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### மத நல்லிணக்கத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயல்!

# தமிழ்நாட்டில் சி.ஏ.ஏ.வை கழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, பிப். 1 -**

**மத நல்லிணக்கத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயல்களையும், அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் எனவும், பா.ஜ.க. கொண்டு வரும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை (சி.ஏ.ஏ.) தமிழ்நாட்டில் கழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது; இலங்கைத் தமிழர்களுக்கு, இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் கால்வைக்க விடமாட்டோம் எனவும் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:–

ஏழு நாட்களில் மேற்கு வங்கம் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA) நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார் பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒன்றிய இணையமைச்சர் ஒருவர்.

**இசுலாமியர்களுக்கு எதிரான சட்டம் வரக் காரணம் அ.தி.மு.க.!**

இலங்கைத் தமிழர்களுக்கும், இசுலாமியர்களுக்கும் எதிரான CAB சட்டம் ஆனதற்கு முழுமுதற்காரணமே நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. ஆதரித்து வாக்களித்ததுதான்.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்தாலும் தோழமை இயக்கங்களுடன் இணைந்து மிகப் பெரிய அளவில் போராட்டங்களை நடத்தியதுடன், இரண்டு கோடிப் பேரிடம் கையெழுத்து பெற்று அதனைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது கழகம். 2021 இல் ஆட்சிக்கு வந்த உடனே CAA வைத் திரும்பப் பெற வலியுறுத்திச் சட்டமன்றத்தில் தீர்மானமே நிறைவேற்றினோம்.

**அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகத்தை மக்கள் அறிவார்கள்!**

தமிழ்நாட்டில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தி.மு.க. அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

மதநல்லிணக்கத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயல்களையும், அதற்குத் துணைபோகும் அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகங்களையும் நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டில் சி.ஏ.ஏ.வை கால்வைக்க விடமாட்டோம்!**

உறுதியாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டினுள் CAA கால்வைக்க விடமாட்டோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 01-02-2024

# குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்...

பா.ஜ.க.வுக்கு தெரிந்தது நேரிய வழியல்ல, குறுக்கு வழி மட்டும்தான். அவர்கள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருப்பது அப்படித்தான். இதுதான் பா.ஜ.க.வுக்கு தெரிந்த ஒரே வழியாகும். அதைத்தான் மெய்ப்பித்திருக்கிறது சண்டிகர் மேயர் தேர்தல்.

பெரும்பான்மை பெற்று மேயராக ஆகி இருக்க வேண்டிய கட்சி ஆம் ஆத்மி ஆகும். ஆனால் கோல்மால் வேலைகளைப் பார்த்து மேயர் பதவியைக் கைப்பற்றி இருக்கிறது பா.ஜ.க. இந்த தேர்தலுக்கு முன்னதாகவே இதனைச் சுட்டிக்காட்டி இருந்தார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

விடுதலைச் சிறுத்தைகள் மாநாட்டில் பேசிய முதலமைச்சர் அவர்கள் சண்டிகர் தேர்தலைப் பற்றி சுட்டிக் காட்டினார்கள். **“நாம் ஒற்றுமையாக நின்றுவிட்டாலே, அது பா.ஜ.க.வை மனரீதியாக பலவீனப்படுத்தி விடும். ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். சண்டிகர் மாநகர மேயரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடக்க இருந்தது. ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. பா.ஜ.க.வுக்கு 14 கவுன்சிலர்கள் ஆதரவு இருந்தது. ஆம் ஆத்மி கட்சிக்கு 13 உறுப்பினர்கள் ஆதரவு இருந்தது. காங்கிரஸ் கட்சிக்கு 7 உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆம் ஆத்மியும், காங்கிரசும் இணைந்து போட்டியிட்டதால் மேயர் பதவியை இந்தியா கூட்டணி கைப்பற்றும் நிலைமை உருவானது. இந்தியா கூட்டணியின் முதல் வெற்றியாக இது அமையப் போகிறது என்று வட மாநில ஊடகங்கள் எழுதினார்கள். உடனே என்ன செய்தார்கள் தெரியுமா? தேர்தலையே ரத்து செய்ய வைத்து விட்டார்கள். தேர்தல் நடந்திருந்தால் இந்தியா கூட்டணிதான் வென்றிருக்கும். ஒரு மேயர் தேர்தலையே கேன்சல் செய்கிறார்கள் என்றால், பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ள பயத்தை இந்தியா கூட்டணித் தலைவர்கள் உணர்ந்தாக வேண்டும்.”** என்று முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையுடன் சொன்னார்கள்.

சண்டிகர் தேர்தலில் இப்போது பா.ஜ.க.வே வென்றுவிட்டது. எப்படி வென்றது? ஆம் ஆத்மியைச் சேர்ந்தவர்கள், காங்கிரசைச் சேர்ந்தவர்கள் பா.ஜ.க.வுக்கு கட்சி மாறி விட்டார்களா? இல்லை. மாறாக, அவர்கள் அளித்த வாக்குகளைச் செல்லாது என்று ஆக்கிவிட்டு, பா.ஜ.க. வென்றதாக அறிவித்துவிட்டார்கள். இதை விட மகா கேவலம் இருந்திருக்க முடியுமா?

**ஜனவரி 30 - அண்ணல் காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள். அதே நாளில் ஜனநாயகப் படுகொலையை நடத்தி இருக்கிறது பா.ஜ.க.**

சண்டிகர் மாநகராட்சியில் மொத்தமுள்ள 35 இடங்களில் காங்கிரஸ் - ஆம் ஆத்மி கூட்டணி 20 இடங்களைப் பெற்றுள்ளது. பா.ஜ.க 14 கவுன்சிலர்களையும், சிரோன்மணி அகாலிதளம் ஒரு கவுன்சிலரையும் பெற்றுள்ளது. மேயர் பதவியை ஆம் ஆத்மி கட்சியும், இரண்டு துணை மேயர் பதவிகளை காங்கிரஸ் கட்சியும் பிரித்துக் கொண்டு கூட்டணி அமைத்து போட்டியிட்டது. ‘இந்தியா’ கூட்டணி வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் இது. ஜனவரி 18 அன்று தேர்தல் நடந்திருக்க வேண்டும். ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெறும் என்ற நிலையில் தேர்தல் அதிகாரியை உடல்நிலை சரியில்லை என்று சொல்லி வரவிடாமல் தடுத்து விட்டது பா.ஜ.க. பிப்ரவரி 6 ஆம் தேதிக்கு தேர்தலை ஒத்தி வைத்தார்கள். ஆனால் திடீரென்று ஜனவரி 30 ஆம் தேதியே தேர்தலை நடத்தி விட்டார்கள். தேர்தலில் காங்கிரஸ் - ஆம் ஆத்மி கூட்டணி 20 வாக்குகளையும், பா.ஜ.க. 16 வாக்குகளையும் பெற்றது. ஆனால் 8 வாக்குகளை செல்லாது என அறிவித்து பா.ஜ.க. குறுக்கு வழியில் வெற்றி பெற்றது.

இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் 8 பேர் வழங்கிய வாக்குகளைச் செல்லாது என்று தேர்தல் அதிகாரி அறிவித்துவிட்டார். பா.ஜ.க.வின் மகா திருட்டுத்தனம் அல்லவா இது? மோடி தேர்தலா, மோசடித் தேர்தலா என்று எதிர்க்கட்சிகள் கேட்பது உண்மை தானே?

முதலமைச்சரும், அம்மாநில ஆம் ஆத்மி தலைவருமான பகவந்த் மான் வெளியிட்டுள்ள அறிக்கையில், **“நாட்டின் ஜனநாயகத்தில் இன்று கறுப்பு நாள்” என குறிப்பிட்டுள்ளார். “இதற்குமுன்பு மத்தியப் பிரதேசம், கோவா, மகாராஷ்டிரா மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் பா.ஜ.க. இதுபோன்ற செயலில்தான் ஈடுபட்டது. இப்போது சண்டிகரில் மேயர் பதவியை பா.ஜ.க. சூறையாடியுள்ளது. இதுதான் பா.ஜ.க.வின் வரலாறு” என்றும் பகவந்த் மான் விமர்சித்துள்ளார். “நாட்டின் ஜனநாயகத்தை பா.ஜ.க. விழுங்கிக்கொண்டிருக்கிறது. மூர்க்கத்தனமான அதிகாரம் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் அழிவை ஏற்படுத்தி விடும்”** என்றும் சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் எச்சரித்துள்ளார். இது அனைவருக்குமான எச்சரிக்கை என்று சொல்லி இருக்கிறது காங்கிரஸ் கட்சி.

சண்டிகர் மேயர் தேர்தலில் குறுக்குவழியில் பா.ஜ.க. வெற்றி பெற்றதை எதிர்த்து ஆம் ஆத்மி கட்சி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது. “வாக்குச்சீட்டுகளில் தேர்தல் அலுவலர் திட்டமிட்டே திருத்தம் செய்துள்ளார்” என்று ஆம் ஆத்மி குற்றம் சாட்டியுள்ளது. வாக்குச் சீட்டுகளில் தேர்தல் அதிகாரி அனில் மஷி, திருத்தம் செய்யும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

காங்கிரஸ் - ஆம் ஆத்மி உறுப்பினர்களின் 8 வாக்குகளை செல்லாது என தேர்தல் அதிகாரி அறிவித்தார். காங்கிரஸ் - ஆம் ஆத்மி கூட்டணிக்கு 12 வாக்குகள் மட்டுமே கிடைத்திருப்பதாகவும், பா.ஜ.க.வுக்கு 16 வாக்குகள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் சண்டிகர் மேயர் பதவியை பா.ஜ.க. கைப்பற்றிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அதாவது 20 வாக்குகளைப் பெற்ற ‘இந்தியா’ கூட்டணி வாக்குகளில் 8 வாக்குகளைச் செல்லாது என்று ஆக்கி, பா.ஜ.க.வை வெற்றி பெற வைத்துள்ளார்கள். சண்டிகர் மேயர் பதவியை குறுக்கு வழியில் பா.ஜ.க. கைப்பற்றியிருப்பது வெட்கக்கேடான ஜனநாயக விரோதச் செயல். நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் எந்த கீழ்நிலைக்கும் பா.ஜ.க. செல்லும் என்பதற்கு சண்டிகர் ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

**ஒரே ஒரு மேயர் தேர்தலிலேயே இத்தனை மோசடிகள் - முறைகேடுகள் - தில்லுமுல்லுகள் என்றால், நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத்தேர்தல்களில் பா.ஜ.க.வின் செயல், எந்த அளவிற்கு இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒற்றுமையின் மூலம் மட்டுமே இத்தகைய மோசடித்தனங்களை வீழ்த்த முடியும்.**

## டெல்லியில் கடும் மூடுபனி!

புதுடெல்லி, பிப். 1-

நாட்டின் பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களில் சில பகுதிகளிலும் குளிர் அலையால் பனிமூட்டமான நிலை நீடித்தது. டெல்லியில் கடந்த சில நாட்களாக வெப்ப நிலை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது. ஹரியானாவின் ஹெசாரில் குறைந்தபட்ச வெப்பநிலை 0.8 டிகிரி செல்சியஸாகவும், உ.பியின் மீரட்டில் 1.5 டிகிரி செல்சியஸாகவும் பதிவாகி உள்ளது.

தொடர் பனிமூட்டம் காரணமாக ரயில் மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 50க்கும் அதிகமாக விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகை நேற்று முன்தினம் தாமதமாகியது.



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் பொன்னை அரசு மேல் நிலைப் பள்ளியில் ‘உங்களை தேடி உங்கள் ஊரில்’, திட்டத்தின்கீழ் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன், ஒன்றிய கழக செயலாளர் சி.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் ஒன்றிய அரசின்

# குளறுபடிகளை அறியாமல் ஆளுநர் குறை கூறலாமா?

## கரூரில் ஆய்வுக் கூட்டத்திற்குப்பின் கு.செல்வப்பெருந்தகை கண்டனம்!

கரூர், பிப்.1-

பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் குளறுபடிகளை போக்காமல் குறை கூறும் ஆளுநருக்கு செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வப்பெருந்தகை தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் சார்பு செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் சன். குழு உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ஆர்.ஈஸ்வரன் (திருச்செங்கோடு) அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ண மூர்த்தி (போளூர்), எஸ்சேகர்(பரமத்திவேலூர்) ஆ.கிருஷ்ண சாமி (பூந்தமல்லி), டாக்டர் சி.சரஸ்வதி (மொடக்குறிச்சி), க.கார்த்திகேயன் (ரிஷிவந்தியம்), மாவட்ட ஆட்சித்தலைவர் மீதங்கவேல், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கி.பிரபாகர், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாம சுந்தரி (கிருஷ்ணராயபுரம்), ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கை பத்திகள் தொடர்பாக மாசு கட்டுப்பாட்டு வாரியம், வணிக வரித்துறை, தொல்லியல் துறை, எரிசக்தி துறை தோட்டக்கலைத் துறை, வேளாண்மை துறை, கால்நடை பராமரிப்பு துறை, ஆதிதிராவிடர் நலத் துறை உள்ளிட்ட துறைகளின் விளக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் பேசுகையில் தெரிவித்ததாவது.

பொதுமக்கள் வரியாக செலுத்தும் தொகையில் நடைபெறும் பொதுமக்களுக்கான வளர்ச்சித்திட்ட பணிகள் பொதுமக்களை முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதற்காக வளர்ச்சித்திட்ட பணிகளுக்கான திட்ட செயலாக்க நடைமுறைகளில் அரசு தெரிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை ஆய்வு மேற்கொண்டு மக்களின் வழி பணம் முறையாக யாக செலவிடப்படுவதை உறுதி செய்வது பொது கணக்கு குழுவின் பணியாகும். எனவே அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் திட்ட பணிகளை அரசு வரைமுறைகளின் படி முழுமையாக குறித்த காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும் கரூர் மாவட்டத்தில் அரசு திட்டப்பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் நடைபெறுவதற்காக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் செல்வப் பெருந்தகை தெரிவிக்கையில்,

பள்ளிக்கூடங்கள் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மாணவியர்கள் மற்றும் பெண் ஆசிரியர்கள் பணி புரியும் பள்ளியில் நாப்கின் எரியூட்டும் இயந்திரங்கள் வைக்கச் சொல்லி அறிவுறுத்தி அதை 24 மணி நேரத்தில் வைப்பதாக சொல்லி இருக்கிறார்கள்.

அதேபோல் பெண்கள் விடுதிக்குச் செல்லும் சாலையில் விளக்குகளும் துணி காய வைப்பதற்குள்ள வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்க கேட்டனர்.

கரூர் மாநகராட்சி ஆணையர் மூலம் இரண்டு மணி நேரத்தில் அந்த பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர்பு கொண்டு பேசியதன் அடிப்படையில் இந்த பணி இவ்வளவு விரைவாக நடைபெற்று உள்ளது. மிகவும் அற்புதமான எளிமையான மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த மாவட்டத்தில் பணி புரிந்து வருகிறார். குடிநீர் தட்டுப்பாடு போக்க ஒரு ஆய்வு அறிக்கையை கேட்டிருக்கிறோம்.

ஆளுநர் திருவாரூர் மாவட்டத்தில் பயணம் மேற்கொள்ளும் போது பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தை தமிழ்நாடு அரசு சரியாக பயன்படுத்தவில்லை என்று கூறி இருக்கிறார். இது முற்றிலும் தவறானது. கரூர் வந்தவுடன் இங்கு ஒரு அறிக்கையை எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் படி ஆளுநர் அவர்கள் அதைப் படித்துப் பார்த்துவிட்டு சரியா தவறா என்று சொல்ல வேண்டும்.

2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி கரூர் மாவட்ட பயனாளிகள் 13442 பேர் என்றும் அதில் 10.355 பேரை காத்திருப்போர் பட்டியலில் வைத்துள்ளார்கள் இதுவரை அதற்கு பதில் இல்லை. அதன் பிறகு 3057 பயனாக தேர்வு செய்யப்படுகிறார்கள். அதன் பிறகு 2018 ஆம் ஆண்டு தகுதியானோர் என்று 4552 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் 2400 நபர்களுக்கு மட்டுமே வீடு கட்ட அனுமதி வந்துள்ளது. மீதமுள்ள 2143 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான அனுமதி ஒன்றிய அரசிடமிருந்து வரவில்லை ஆளுநர் அவர்கள் இந்த அனுமதியை பெற்று தர வேண்டும். இதில் நிறைய குளறுபடிகள் இருக்கிறது. பயனாளி கள் இறந்து விட்டால் இதற்கான பிரதியாக இணைய தள போர்டலில் இருந்து அவர்களின் பெயரை எடுக்க முடியவில்லை. இதே போல் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டத்திலும் இந்த பிரச்சனை இருக்கிறது. இவ்வளவு பிரச்சினைகளை வைத்துக்கொண்டு பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தை தமிழக அரசு சரியாக பயன் படுத்தவில்லை என்று பொத்தாம் பொதுவாக யாரோ பேசுவது போல் பேசி இருப்பது உண்மையில் வருத்தம் அளிக்கக்கூடிய செய்தியாகும் ஆவணங்கள் பார்த்து அவர் தான் பதில் சொல்லவேண்டும்.

50 சதவீதத்திற்கு மேல் உள்ள பயனாளிகளின் பெயரை போர்டலில் இருந்து எடுக்க முடியவில்லை. அதை யார் செய்வது?. உண்மையான பயனாளிகளை யார் கண்டுபிடிப்பது. ஒன்றிய அரசு வீடு கட்டும் திட்டத்திற்கு 40 விழுக்காடுகள் தொகை ஒதுக்குகிறது என்றால் மாநில அரசு 60 விழுக்காடு பணம் கொடுக்கிறது. எந்த அரசாக இருந்தால் என்ன?. மாநில அரசின் பங்கு 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளபோது சொந்தம் கொண்டாட முடியாது. இது ஒரு மத்திய மாநில அரசு இணைந்து செயல்படுத்தும் வளர்ச்சி திட்டமாகும் இதை ஆளுநர் அவர்கள் விளக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்கள். ம.கண்ணன். கவிதா (நிலம் எடுப்பு), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ் செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மத நல்லிணக்க உறுதிமொழி!

சிவகங்கை, பிப். 1-

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் வேண்டுகோளை ஏற்று சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் சிவகங்கை சண்முகராஜா கலையரங்கில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு கூட்டம் மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவு துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார் .

இந்த கூட்டத்தில் முதல்வரின் வேண்டுகோளின் படி மதநல்லிணக்க உறுதி மொழியை அமைச்சர் பெரியகருப்பன் கூற கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் திரும்ப கூறினார்கள். இந்த உறுதிமொழி ஏற்பு கூட்டத்தில் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கே.எஸ்.எம்.மணி முத்து, பாம்பாட்டி சித்தர் பாலமுருகன் வாலாஜா நவாப் பள்ளி வாசல் துணைத்தலைவர் ராஜா முகமது, இமாம் இஷாத், ஹவ்வாபள்ளி தலைவர் அ.தாஜ்தீன், துணைச் செயலாளர் யாசின், சிவகங்கை அலங்கார அன்னை ஆலய பங்கு தந்தை ஜான்பிரிட்டோ, ஜேசுராஜா, அருட் சகோதரிகள் அனில்டா, அமிர்தா, முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதய குமார், ஏஆர்.ஜெய. முர்த்தி, நகர்கழக செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, என். குணசேகரன், பெரி. பாலா, ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம்.அண்ணாதுரை, துரை. ராஜாமணி, பூபாலசிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன், நா. நெடுஞ்செழி யன், குன்னக்குடி சுப்பிரமணியன், ஆர். எம்.கென்னடி, சுப.சின்னதுரை, வி ஆரோக்கியசாமி, யோக கிருஷ்ணகுமார், ஆறு. செல்வராஜன், பூமணி கே.பாலசுப்பிரமணியன், பேரூர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மாவட்ட சுற்றுப் புறச் சூழல் அணி தலைவர் வல்லபாய், மாவட்ட ஆதி திராவிடர் நல குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, ஒன்றிய குழு தலைவர்கள் மஞ்சுளா பாலச்சந்தர் லதாஅண்ணாதுரை, துணைத்தலைவர் முத்துச்சாமி, பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகில ராணி நாராயணன், நகர்மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, சேதுபதிராஜா, எஸ்.எம்.மதிவாணன், ஒன்றிய, நகர நிர்வாகிகள் முத்துகுமார், அண்ணாமலை ஆர்.டி.சேகர், மதார், வே.கருணாகரன், விவசாய அணி காளிமுத்து, சேவியர்,வீனஸ்ராமநாதன், சிவபுரிசேகர், அயூப்கான், ஜெயகாந்தன், சரவணன் வீரகாளை, முருகேசன், இளைஞரணி அரிஹரன், ஷாஜகான், மகளிரணி மார்கரெட், கமலா, திலகவதி கண்ணன், சண்முகபிரியா, மஞ்சுளா உட்பட ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பள்ளி மாணவராக இருந்தபோது தொடங்கிய அமைப்பு “தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்”. கலைஞர் நூற்றாண்டில் இப்போது மீண்டும் பற்றத் தொடங்குகிறது அந்த நீறுபூத்த நெருப்பு. தமிழ்நாடு முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் உதயமாகிறது “தமிழ் மாணவர் மன்றம்”. அதற்கான கொடி இலச்சினையை @dmk_studentwing நிர்வாகிகள் முன்னிலையில் நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிமுகப் படுத்தினார். இளம் மனங்களில் தமிழ் மொழி, பண்பாடு, கல்வி உரிமை சார்ந்த உணர்வுகளை விதைப்பதோடு, சமூக நீதி சமத்துவத்திற்கான களமாகவும், ‘தமிழ் மாணவர் மன்றம்’ சிறக்க வாழ்த்துத் தெரிவித்தார்.




திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், ஜனவரி 30 மதநல்லிணக்க நாளை முன்னிட்டு, மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால், வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் தலைமையில் கழகத்தினர் உறுதிமொழி ஏற்றனர். உடன் சி.என்.அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி, சீனி.கார்த்திகேயன், ச.நியூட்டன், நாசர் உசேன், கலிமுல்லா, நவாப்ஜான், முபாரக் மற்றும் ஹாஜி எம்.இ.ஜமாலுதீன், ஏ.எல்.சி.துணைத் தலைவர் ஜேக்கப், கமல்சந்த் ஜெயின், அருணாச்சல குருக்கள், நிர்மலாவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.




கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி முன்னிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டு குழுத்தலைவர் மற்றும் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டு குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி.ச.வளர்மதி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இ.பரந்தாமன் (எழும்பூர்), இராஜா (தாம்பரம்), முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), ச.சிவக்குமார் (மயிலம்),சேவூர் ராமச்சந்திரன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல். ஈஸ்வரப்பன் (ஆற்காடு), சு.ரவி (அரக்கோணம்) மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் செல்வி.கிரண்ஸ்ருதி, சட்டமன்ற பேரவை முதன்மை செயலாளர் முனைவர் கி. சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும்

# படகுக் குழாம்களில் - சென்ற ஆண்டு 36 லட்சத்திற்கும் அதிகமானோர் பயணம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, பிப். 1-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2023 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரை 9 மாதங்களில் மொத்தம் 36,28,257 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் - என சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தலைமையில், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (30.1.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழியை அனைத்து அலுவலர்களும் ஏற்றனர்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். சுற்றுலா கொள்கை 2023- ஐ வெளியிட்டு, சுற்றுலாத் துறையில் முதலீட்டாளர் களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப் படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2022 - 2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரை 9 மாதங்களில் மட்டும் மொத்தம் 36,28,257 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், படகு சவாரி மேற்கொள்ள படகு குழாம்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலர்களும், பணியாளர்களும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்களுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி அவர்களுடைய முதலாவது விருப்பமான தேர்வாக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்களை உருவாக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி. இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில்

# மாநகர போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டுகள் விற்பனை!

## மாநகர போக்குவரத்துக் கழக இயக்குநர் தகவல்!

சென்னை, பிப். 1 -

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், பொதுமக்கள் நலன் கருதி, 01.02.2024 முதல் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர சலுகை பயணச்சீட்டு விற்பனை மையம் (MST Counter) செயல்பட உள்ளது - மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கிஸ் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களால், கடந்த 30.12.2023 அன்று புதிதாக திறக்கப்பட்ட கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், பொதுமக்கள் நலன் கருதி, 01.02.2024 முதல் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர சலுகை பயணச்சீட்டு விற்பனை மையம் (MST Counter) செயல்பட உள்ளது.

இப்பயணச்சீட்டு விற்பனை மையத்தில், விருப்பம்போல் பயணம் செய்யக் கூடியரூ.1000/-மதிப்பிலான பயண அட்டை TAYPT (ஒவ்வொரு மாதமும் 16-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 15-ஆம் தேதி வரை), மாதாந்திர சலுகை பயண அட்டை MST (மாதந்தோறும் 1-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி வரை) மற்றும் 50% மாணவர் சலுகை பயண அட்டை SCT (ஒவ்வொரு மாதமும் 11-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 10-ஆம் தேதி வரை) பயணம் செய்யக்கூடிய பயணச்சீட்டுகள் மாதந்தோறும் 1 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை வழங்கப்படும்,

மேலும், 60 வயது பூர்த்தியடைந்த மூத்தக் குடிமக்களுக்கான கட்டணமில்லா பயண அட்டையுடன் 10 எண்ணிக்கை கொண்ட டோக்கன்கள், மா.போ. கழக கிளாம் பாக்கம் பணிமனையிலும் வழங்கப்படும்.

எனவே, பயணிகள் இதனை பயன்படுத்தி, கிளாம்பாக்கம் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டு விற்பனை மையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோவை மு.தமீம்

**பிப்ரவரி 1 (2022)**



இளம்வயதிலேயே கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் வட்ட பிரதிநிதி, நகர துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1984ஆம் ஆண்டு நடைபெற்ற புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்து வைத்தவர்.

1996ல் கோவை மாநகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்று, மாநகராட்சி பணி நியமனக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் 100 ஜீன் 2023 முதல் ஜனவரி 2024 வரை 80 நிகழ்ச்சிகள் நிறைவு பிப்ரவரி 2024 மாத நிகழ்வுகள் 10



அமைச்சர் - மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 02/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 21.21A மலைக்கோட்டை பகுதி | எச்.முஹம்மது முபாரக் பி.ராஜா (எ) வரதராஜன் வட்ட கழக செயலாளர்கள் | தாம்பரம் ஜின்னா தலைமைக் கழக பேச்சாளர் |
| 2. 04/02/24 10.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் கழக நிர்வாகிகள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் காணொளி வாயிலாக அரங்கம் அமைத்து கருத்தரங்கம் | மாவட்ட. மாநகர அயலகஅணி | சு.அடைக்கலராஜா மாவட்ட அமைப்பாளர் கே.விஜயகோபால் மாநகர அமைப்பாளர் | கே.எஸ்.மஸ்தான் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எம்.எம்.அப்துல்லா M.P. மாநில அணி செயலாளர் கருத்தரங்கத்தில் உரையாற்றுபவர் ஜ.லியோனி கொள்கை பரப்பு இணை செயலாளர் |
| 3. 06/02/24 06.00 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும்மாரத்தான் போட்டி மற்றும் நலிந்த தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா | தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | எஸ்.ஜோசப் நெல்சன் மாவட்ட தொ.மு.ச.செயலாளர் | பேரவை எம்.சண்முகம் M.P. மாநில தொ.மு.ச.செயலாளர் சிறப்பு அழைப்பாளர் க.பொன்முடி கழக துணை பொதுச்செயலாளர் |
| 4. 10/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் பொதுக்கூட்டம் | மலைக்கோட்டை பகுதி கழகம் | மருந்துக்கடை ஆர்.மோகன் பகுதி கழக செயலாளர் | பி.கே.சேகர் பாபு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் |
| 5. 11/02/24 05.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் கல்வியாளர்கள் பங்கேற்கும் சொல்லரங்கம் | மாவட்ட. மாநகர வர்த்தக அணி | என்.செந்தமிழ் செல்வன் மாவட்ட அமைப்பாளர் ஜெ.சரவணன் மாநகர அமைப்பாளர் | கவிஞர்.காசிமுத்து மாணிக்கம் மாநில அணி செயலாளர் கல்வியாளர்கள் சிறப்புரை சு.வெங்கடேசன் M.P., வி.பொன்ராஜ் |
| 6. 16/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 34.34A பாலக்கரை பகுதி | நெ.சகாய மேரி சில்வியா த.கருணாநிதி வட்ட கழக செயலாளர்கள் | தக்கோலம் தேவபாலன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 7. 18/02/24 08.00 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு அமைத்து மருங்காபுரி வடக்கு ஒன்றியத்தில்17ஊராட்சிகளிலும் கழக கொடியேற்றுதல் | மருங்காபுரி வடக்கு ஒன்றிய கழகம் | சி.செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 8. 18/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | மார்க்கெட் பகுதி கழகம் | ஆர்.ஜி.பாபு பகுதி கழக செயலாளர் | கே.என்.நேரு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கழக முதன்மைச் செயலாளர் |
| 9. 25/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 48.48A பொன்மலை பகுதி | மு.ஜமால் முகமது மா.வரதராஜன் வட்டக் கழக செயலாளர்கள் | உடுமலை தண்டபாணி தலைமைக் கழக பேச்சாளர் |
| 10. 28/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்65.65A கலைஞர் நகர் பகுதி | அ.பன்னீர்செல்வம் எம்.சேகர் வட்ட கழக செயலாளர்கள் | நெல்லை மூர்த்தி தலைமைக் கழக பேச்சாளர் |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


யுனைடெட் ஸ்டூடன்ட்ஸ் ஆஃப் இந்தியா
(16 மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு)
சென்னை பேரணி
பிப்ரவரி
01
09.00AM
இடம்:
சென்னை - ராயபுரம் -
செயின்ட் பீட்டர்ஸ் மைதானம்
முதல் ராபின்சன் பூங்கா வரை.
பேரணியை துவக்கி வைப்பவர் :
மாண்புமிகு அமைச்சர், இளந்தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்கள்.,
மாணவர் படையே!
வாரீர்! வாரீர்!!
BAN NEET
SAVE INDIA
REJECT BJP
சி.வி.எம்.பி.எழிலரசன் MLA.,
கழக மாணவர் அணி செயலாளர்
காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்
அலெக்ஸ் அப்பாவு
மாவட்ட மாணவரணி அமைப்பாளர்,
நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.


கல்வியை காப்போம்!
தேசியக் கல்விக் கொள்கையை
நிராகரிப்போம்!
இந்தியாவை காப்போம்!
பாஜகவை நிராகரிப்போம்!
யுனைடெட் ஸ்டூடன்ட்ஸ் ஆஃப் இந்தியா
16 மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு
சென்னை பேரணி
பேரணியை துவக்கி வைப்பவர்
மாண்புமிகு அமைச்சர் இளந்தலைவர்
உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
வாழ்த்துரை
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள்
நாள் : 01.02.2024 காலை 9.00 மணி
இடம் : சென்னை ராயபுரம்,
செயின்ட் பீட்டர்ஸ் மைதானம் முதல்
ராபின்சன் பூங்கா வரை
BAN NEET
SAVE INDIA
REJECT BJP
BAN NEET
SAVE INDIA
REJECT BJP
தி.மு.க. மாணவர் அணி
Star Signs
044 - 43 55 48 47



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், ஜனவரி 30 மதநல்லிணக்க நாளை முன்னிட்டு, மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால், வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் தலைமையில் கழகத்தினர் உறுதிமொழி ஏற்றனர். உடன் சி.என்.அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, சீனி.கார்த்திகேயன், ச.நியூட்டன், நாசர் உசேன், கலிமுல்லா, நவாப்ஜான், முபாரக் மற்றும் ஹாஜி எம்.இ.ஜமாலுதீன், ஏ.எல்.சி.துணைத் தலைவர் ஜேக்கப், கமல்சந்த் ஜெயின், அருணாச்சல குருக்கள், நிர்மலாவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.




கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி முன்னிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டு குழுத்தலைவர் மற்றும் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டு குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி.ச.வளர்மதி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இ.பரந்தாமன் (எழும்பூர்), இராஜா (தாம்பரம்), முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), ச.சிவக்குமார் (மயிலம்),சேவூர் ராமச்சந்திரன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல். ஈஸ்வரப்பன் (ஆற்காடு), சு.ரவி (அரக்கோணம்) மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் செல்வி.கிரண்ஸ்ருதி, சட்டமன்ற பேரவை முதன்மை செயலாளர் முனைவர் கி. சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும்

# படகுக் குழாம்களில் - சென்ற ஆண்டு 36 லட்சத்திற்கும் அதிகமானோர் பயணம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, பிப். 1-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2023 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரை 9 மாதங்களில் மொத்தம் 36,28,257 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் - என

சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தலைமையில், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (30.1.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழியை அனைத்து அலுவலர்களும் ஏற்றனர்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவி லேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். சுற்றுலா கொள்கை 2023- ஐ வெளியிட்டு, சுற்றுலாத் துறையில் முதலீட்டாளர் களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப் படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2022 - 2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரை 9 மாதங்களில் மட்டும் மொத்தம் 36,28,257 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், படகு சவாரி மேற்கொள்ள படகு குழாம்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலர்களும், பணியாளர்களும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்களுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி அவர்களுடைய முதலாவது விருப்பமான தேர்வாக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்களை உருவாக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி. இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில்

# மாநகர போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டுகள் விற்பனை!

## மாநகர போக்குவரத்துக் கழக இயக்குநர் தகவல்!

சென்னை, பிப். 1 -

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், பொதுமக்கள் நலன் கருதி, 01.02.2024 முதல் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர சலுகை பயணச்சீட்டு விற்பனை மையம் (MST Counter) செயல்பட உள்ளது - மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கிஸ் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களால், கடந்த 30.12.2023 அன்று புதிதாக திறக்கப்பட்ட கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், பொதுமக்கள் நலன் கருதி, 01.02.2024 முதல் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர சலுகை பயணச்சீட்டு விற்பனை மையம் (MST Counter) செயல்பட உள்ளது.

இப்பயணச்சீட்டு விற்பனை மையத்தில், விருப்பம்போல் பயணம் செய்யக் கூடியரூ.1000/-மதிப்பிலான பயண அட்டை TAYPT (ஒவ்வொரு மாதமும் 16-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 15-ஆம் தேதி வரை), மாதாந்திர சலுகை பயண அட்டை MST (மாதந்தோறும் 1-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி வரை) மற்றும் 50% மாணவர் சலுகை பயண அட்டை SCT (ஒவ்வொரு மாதமும் 11-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 10-ஆம் தேதி வரை) பயணம் செய்யக்கூடிய பயணச்சீட்டுகள் மாதந்தோறும் 1 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை வழங்கப்படும்,

மேலும், 60 வயது பூர்த்தியடைந்த மூத்தக் குடிமக்களுக்கான கட்டணமில்லா பயண அட்டையுடன் 10 எண்ணிக்கை கொண்ட டோக்கன்கள், மா.போ. கழக கிளாம் பாக்கம் பணிமனையிலும் வழங்கப்படும்.

எனவே, பயணிகள் இதனை பயன்படுத்தி, கிளாம்பாக்கம் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டு விற்பனை மையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.


## திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் 100 ஜீன் 2023 முதல் ஜனவரி 2024 வரை 80 நிகழ்ச்சிகள் நிறைவு பிப்ரவரி 2024 மாத நிகழ்வுகள் 10



அமைச்சர் - மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 02/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 21,21A மலைக்கோட்டை பகுதி | எச்.முஹம்மது முபாரக் பி.ராஜா (எ) வரதராஜன் வட்ட கழக செயலாளர்கள் | தாம்பரம் ஜின்னா தலைமைக் கழக பேச்சாளர் |
| 2. 04/02/24 10.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் கழக நிர்வாகிகள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் காணொளி வாயிலாக அரங்கம் அமைத்து கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர அயலகஅணி | சு.அடைக்கலராஜா மாவட்ட அமைப்பாளர் கே.விஜயகோபால் மாநகர அமைப்பாளர் | கே.எஸ்.மஸ்தான் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எம்.எம்.அப்துல்லா M.P. மாநில அணி செயலாளர் கருத்தரங்கத்தில் உரையாற்றுபவர் ஐ.லியோனி கொள்கை பரப்பு இணை செயலாளர் |
| 3. 06/02/24 06.00 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும்மாரத்தான் போட்டி மற்றும் நலிந்த தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா | தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | எஸ்.ஜோசப் நெல்சன் மாவட்ட தொ.மு.ச.செயலாளர் | பேரவை எம்.சண்முகம் M.P. மாநில தொ.மு.ச.செயலாளர் சிறப்பு அழைப்பாளர் க.பொன்முடி கழக துணை பொதுச்செயலாளர் |
| 4. 10/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் பொதுக்கூட்டம் | மலைக்கோட்டை பகுதி கழகம் | மருந்துக்கடை ஆர்.மோகன் பகுதி கழக செயலாளர் | பி.கே.சேகர் பாபு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் |
| 5. 11/02/24 05.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் கல்வியாளர்கள் பங்கேற்கும் சொல்லரங்கம் | மாவட்ட, மாநகர வர்த்தக அணி | என்.செந்தமிழ் செல்வன் மாவட்ட அமைப்பாளர் ஜெ.சரவணன் மாநகர அமைப்பாளர் | கவிஞர்.காசிமுத்து மாணிக்கம் மாநில அணி செயலாளர் கல்வியாளர்கள் சிறப்புரை சு.வெங்கடேசன் M.P., வி.பொன்ராஜ் |
| 6. 16/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 34,34A பாலக்கரை பகுதி | நெ.சகாய மேரி சில்வியா த.கருணாநிதி வட்ட கழக செயலாளர்கள் | தக்கோலம் தேவபாலன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 7. 18/02/24 08.00 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு அமைத்து மருங்காபுரி வடக்கு ஒன்றியத்தில்17ஊராட்சிகளிலும் கழக கொடியேற்றுதல் | மருங்காபுரி வடக்கு ஒன்றிய கழகம் | சி.செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 8. 18/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | மார்க்கெட் பகுதி கழகம் | ஆர்.ஜி.பாபு பகுதி கழக செயலாளர் | கே.என்.நேரு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கழக முதன்மைச் செயலாளர் |
| 9. 25/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 48,48A பொன்மலை பகுதி | மு.ஜமால் முகமது மா.வரதராஜன் வட்டக் கழக செயலாளர்கள் | உடுமலை தண்டபாணி தலைமைக் கழக பேச்சாளர் |
| 10. 28/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்65,65A கலைஞர் நகர் பகுதி | அ.பன்னீர்செல்வம் எம்.சேகர் வட்ட கழக செயலாளர்கள் | நெல்லை மூர்த்தி தலைமைக் கழக பேச்சாளர் |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோவை மு.தமீம்

**பிப்ரவரி 1 (2022)**



இளம்வயதிலேயே கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் வட்ட பிரதிநிதி, நகர துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1984ஆம் ஆண்டு நடைபெற்ற புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்து வைத்தவர்.

1996ல் கோவை மாநகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்று, மாநகராட்சி பணி நியமனக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நேற்று முன்தினம் (30.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் சென்னை விடுதிகளில் பயில்கின்ற மாணவ மாணவியருக்கு உயர்ரக ட்ராக் சூட், தலா 2 விளையாட்டு உபகரணங்கள், தலா 2 டி சர்ட்ஸ் மற்றும் ஒரு ஜோடி ஷூ உள்ளிட்டவற்றை முதற்கட்டமாக வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் பொருநை இலக்கிய திருவிழா மற்றும் இளைஞர் இலக்கிய திருவிழா நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று சாகித்ய அகாடமி விருதாளர் பொன்னீலன், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மேயர் சரவணன் மாநகர காவல் துறை ஆணையாளர் மூர்த்தி,பொது நூலக இயக்குனர் இளம்பகவத் ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக கலைநிகழ்ச்சிகள் நடத்திய தெற்கு கள்ளிகுளம் தட்சிணமாற நாடார் சங்க கல்லூரிக்கு வருகிற புத்தகத் திருவிழாவில் புத்தகம் பெறுவதற்கான ரூபாய் 5000 மதிப்புள்ள கூப்பனை வழங்கினார். உடன் மாவட்ட வன அலுவலர் முருகன், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, திட்ட இயக்குனர் சுரேஷ் உள்ளனர்.

நெல்லை மேயர் பி.எம்.சரவணன் பங்கேற்பு

# பாளையங்கோட்டையில் 2வது பொருநை இலக்கிய திருவிழா!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - பொன்னீலன் - மாவட்ட ஆட்சியர் கரு.கா.ப.கார்த்திகேயன் சிறப்புரை!

நெல்லை.பிப்.1-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள நேருஜி கலையரங்கில் நெல்லைக்கு பெருமை சேர்க்கும் விதமாக நடைபெறும் மாபெரும் பொருநை இலக்கிய திருவிழா மற்றும் இளைஞர் இலக்கிய திருவிழா நிகழ்வு மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப. கார்த்திகேயன் தலைமையில் நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,

நெல்லை மாநகர காவல் துறை ஆணையாளர் முனைவர். பா.மூர்த்தி பொது (முழு கூடுதல் பொறுப்பு) நூலகம் இயக்குனர் க. இளம்பகவத், மாவட்ட வன அலுவலர் இரா. முருகன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சு.சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா வரவேற்புரை யாற்றினார். நிகழ்ச்சியை எழுத்தாளர் இரா.நாறும்பூநாதன் தொகுத்து வழங்கினார். தமிழ் மொழியின் இலக்கிய மரபுகளை கொண்டாடும் வகையிலும் தமிழர் பண்பாடு நாகரிகத்தை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் அரசு சார்பில் கடந்த ஆண்டு முதல் தமிழகத்தில் நெல்லை, கோவை, திருச்சி,மதுரை,சென்னை ஆகிய 5 மண்டலங்களில் இலக்கியத் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது.இதன் தொடர்ச்சியாக நெல்லையில் 2 நாள் நடக்கும் 2,வது பொருநை நெல்லை இலக்கிய திருவிழா மற்றும் இளைஞர் இலக்கிய திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று பொருநை இலக்கிய திருவிழா மற்றும் இளைஞர் இலக்கிய திருவிழாவை தொடங்கி வைத்து பேசியதாவது.

முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் 2வது பொருநை நெல்லை இலக்கிய திருவிழா,இளைஞர் இலக்கிய திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. உலகில் தோன்றிய மொழிகளில் இன்னும் அழியாமல் இருக்கின்ற மொழியாகவும் தொன்மையான மொழியாகவும் இருப்பது நமது தமிழ் மொழியாகும்.

இந்தியாவில் அதிக அளவு சாகித்ய அகாடமி விருது பெற்றவர்கள் உள்ள பகுதியாக பொருநை ஆற்றங்கரை பகுதி அமைந்துள்ளது. தன்னை பற்றி நினைக்காமல் நாட்டைப் பற்றியும், சமூகத்தை பற்றியும் சிந்திப்பவர்கள் தான் படைப்பாளர்கள்.மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான் இலக்கியம் மீது உள்ள பற்றின் காரணமாக அவர் எடுத்த முயற்சியால் தான்,தமிழ் மொழி அழியாமல் இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.உலகில் முதல் தோன்றிய மூன்று மொழிகளில் தமிழ் மொழி மட்டுமே அழியாமல் திகழ்ந்து வருகிறது.

இந்தியாவில் தோன்றிய மொழிகளில் வெளிநாடுகளில் ஆட்சி மொழியாக தமிழ் இருந்து வருகிறது. இந்தியாவை தாண்டி உலகில் நமது தமிழ் மொழி

சிங்கப்பூர்,மலேசியா, இலங்கை,கனடா உள்ளிட்ட ஏழு நாடுகளில் ஆட்சி மொழியாக இருக்கும் தமிழ், தமிழகத்தில் மட்டுமே ஆட்சி மொழியாக உள்ளது.நமது தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்தது என்றால் அதற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் காரணம்.இந்தி ஆட்சி மொழியாக அங்கீகாரம் பெற முடியாத நிலையில் இருக்கிறது. சாகித்ய அகாடமி விருது பெற்ற பலர் வறுமையில் இருந்ததை அறிந்து அவர்களை கௌரவப்படுத்தியதோடு அவர்களுக்கு தேவையானவற்றை தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்.

தமிழ் இந்தியாவின் ஆட்சி மொழியாக கொண்டு வர வேண்டும். அதற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் ஆட்சி மொழி அந்தஸ்து கிடைப்பது மிக கடினமாக உள்ளது.சிந்துசமவெளி நாகரிகத்திற்கு முந்தைய நாகரிகமாக கருதப்படும் தமிழகத்தில் கீழடி,ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட பல இடங்களில் நடத்திய ஆய்வில்,அறிவியல் ரீதியாக கண்டறியப்பட்டுள்ளது,சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களிலும் கீழடி உள்ளிட்ட தமிழகத்தில் நடத்தப்பட்ட அகழ்வாயில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களிலும் ஒற்றுமை அதிகம் உள்ளது. சிந்து சமவெளி பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள பொருட்களை பார்த்தால் தமிழர்கள் பயன்படுத்திய பொருட்களை போல தான் அதிகம் தெரிகிறது. தமிழர்கள் சிந்து நதிக்கரையிலும் வாழ்ந்தார்கள் என்பதற்கு மிகப்பெரிய சான்றாக அந்த ஆய்வு தகவல்கள் உள்ளன.தமிழ்நாகரிகத்தின் வாழ்க்கை வரலாறு வாழ்ந்தது,பெரிய சான்று, முதலமைச்சர் அவர்கள் வந்த பிறகு அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்துள்ளோம்.தமிழர் நாகரிகம் தான் இந்தியாவில் உள்ளது.

ஆனால் அதனை ஒன்றிய அரசு வெளியிடாமல் மறைத்து வருகிறது. இந்தியாவின் வரலாறு சிந்து சமவெளியில் இருந்து தொடங்கினாலும் பொருநை நதி கரையில் தொடங்கி னாலும் தமிழர்களின் நாகரிகமாகத்தான் வெளிவருகிறது. தமிழ் நாகரிகம் என்பது சாதாரணமானதல்ல உலகின் தலைசிறந்த இலக்கியங்களை உள்ளடக்கியது.மனிதன் வாழ்வை எப்படி வாழ வேண்டும் என்பதை திருக்குறள் இரண்டு அடியில் காட்டுகிறது.தமிழகத்தில் சாதி, மதத்தால் யாரையும் பிரிக்க முடியாது.

திட்டமிட்டு சிலர் நம்மை பிரிக்க நினைக்கின்றார்கள்.அதனை யாரும் பிரிக்க முடியாது.இப்படிப்பட்ட இலக்கிய திருவிழாவை முதலமைச்சர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். வாய்ப்பை நமக்கு தந்துள்ளார்கள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் தமிழர்கள் நமக்கு வேறு அடையாளம் இல்லை, எல்லோருக்கும் எல்லாம் அதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார். முன்னதாக சாகித்ய அகாடமி விருதாளர் பொன்னீலன் பேசியதாவது.

தமிழகத்திற்கு பெருமை தருவது இலக்கியம் தான். இந்த இலக்கியங்கள் தான் அனைவரையும் சிந்திக்க வைக்கிறது. பாரதி சுதந்திரத்திற்கு முன்பாகவே அனைவரையும் இலக்கியத்தால் சிந்திக்க வைத்தார். சிந்தனை பரந்து விரிய, விரிய மனிதன் மானுடன் ஆகிறான். எழுத்து மனிதனை சிந்திக்க வைக்கிறது வளர்ச்சி அடையச் செய்கிறது.

இவ்வாறு சாகித்ய அகாடமி விருதாளர் பொன்னீலன் பேசினார்.

இதனைத் தொடர்ந்து கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளிலும் நடைபெற்றது. நிகழ்வில் முன்னதாக அனைவரும் தீண்டாமை எதிர்ப்பு உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட நூலக அலுவலர் மீனாட்சிசுந்தரம் நன்றியுரை யாற்றினார்.

நிகழ்வில் எழுத்தாளர்கள்,கவிஞர்கள், கல்லூரி பள்ளி,மாணவர், மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1 /2761/2023

**குறுகிய மறு ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

Rate Contract for Supply of 50 No's of Desktop Computers, 50 No's Laser Printers, 50 No's of UPS and 10 No's Laptops with 5 Years onsite warranty / Support for GCC users for a period of 6 months - க்கான ஒப்பம்

| பணியின் மதிப்புத் தொகை 56,20,906/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 56,209/- |
|---|---|

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 08.02.2024 அன்று பிற்பகல் 3.00 மணி. ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 09.02.2024 பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 515 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**


காந்தியாரைக் கொன்ற மதவாத அரசியல் சக்திகளை வீழ்த்துவதே;

# காந்தியாருக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதை!

## காந்தியார் நினைவுநாளையொட்டி - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, பிப்.1-

காந்தியார் படுகொலை செய்யப்பட்ட இந்நாளில் மக்கள் செய்யவேண்டியது மலர்வளையம் வைப்பதல்ல - காந்தியாரைக் கொலை செய்த மதவாத ஆதிக்க சக்திகளை மதவாத அரசியலை வரும் தேர்தலில் வீழ்த்துவதே என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் விடுத்த அறிக்கை வருமாறு:

நேற்று முன்தினம் (30-1-2024) 'தேசப்பிதா' என்று இந்திய மக்களால் பெரிதும் அழைத்து, மதிக்கப்பட்ட அண்ணல் காந்தியார் படுகொலை செய்யப்பட்ட கொடூரமான மதவெறி கோரத்தாண்டவம் ஆடிய நாள்!

இந்தியா "சுதந்திரம்" பெற்றது 15-8-1947 இல்! அதுவும் ஜோதிடர் குறித்த "நல்ல நேரமான" ஆகஸ்ட் 14 ஆம் தேதி, நள்ளிரவில், நடுநிசியில் வந்த சுதந்திரம்!

'தேசத்தந்தை' அண்ணல் காந்தியார், கோட்சே என்ற மதவெறிப் பார்ப்பனரால் கொல்லப்பட்டது 3011948 இல் அதாவது "சுதந்திரம்" பெற்ற 165 ஆம் நாளில்!

அதற்கான காரணங்களில் முக்கியமான ஒன்று, காந்தியார், "நம் நாடு மதச்சார்பற்றது" என்று சொன்ன 53 ஆம் நாள் கொல்லப்பட்டார் மதவெறியர்களால்! காந்தியாரைக் கொன்ற கோட்சே, ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவன். காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட நேரத்தில் கலவரங்களைத் தடுத்து அமைதி காக்கச் செய்தவர் தந்தை பெரியார்!

'காந்தியாரைச் சுட்டுக் கொன்றவன் ஒரு முஸ்லிம்' என்ற தவறான பொய்யான பரப்புரையை தமிழ்நாட்டில் பரப்பியதன் விளைவாக, திருவண்ணாமலை, வாணியம்பாடி, ஈரோடு போன்ற பல ஊர்களில் இஸ்லாமியர்கள் குறி வைக்கப்பட்டு, மதக் கலவரம் ஏற்படும் அபாய நிலையில், அன்றைய முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமியார் அவர்களின் விருப்பத்திற்கேற்ப, தந்தை பெரியாரை, திருச்சி வானொலி பேட்டி கண்டு வெளியிட்ட செய்தி மதக் கலவரங்களைத் தடுத்து நிறுத்தியது; மனிதநேயமும், அமைதியும் திகழ்ந்த



பூமியாயிற்றே தமிழ்நாடு!

காந்தியாரை, அவரது வருணாசிரம ஆதரவு நிலைக்காக கடுமையாகக் கண்டித்து சமூகநீதி காக்க காங்கிரசை விட்டு (1925 இல்) வெளியேறியவர் தந்தை பெரியார்!

காங்கிரசிலிருந்து வெளியேறி, சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியாரை, காந்தியார் அழைத்து, பெங்களூரில் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார்... இல்லை, இல்லை வாதாடினார்!

### அச்சந்திப்புப் பதிவான ஆவணங்களாகி, ஏடுகளில் உள்ளது!

உரையாடலின் இறுதியில், "நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்; ஹிந்து மதத்தைச் சார்ந்த மதவெறியர்கள் உங்களையே உயிருடன் விட்டு வைக்கமாட்டார்கள்" என்று முன்னோட்டமான "தீர்க்க தரிசனமாகவே" சொன்னார், தந்தை பெரியார்!

ஆம்! 120 வயது வரை வாழ்ந்து மக்களுக்குத் தொண்டாற்ற விருப்பமுள்ள காந்தியாரை, மதவெறி, ஜாதி வெறி உயிர் பறித்து, 80 ஆம் வயதிலேயே பலி வாங்கி விட்டது!

### மகாராட்டிரத்தில் பார்ப்பனர்கள் தாக்கப்பட்டதுண்டே!

அந்தச் சூழ்நிலையில்கூட, மகாராட்டிராவில் காந்தியாரைக் கொன்ற கோட்சே, பார்ப்பனர் என்ற செய்தி பரவியவுடன், சத்தாரா, நாசிக் போன்ற இடங்களில் பார்ப்பனர்கள் தாக்கப்பட்டனர்; அக்கிரகாரங்கள் சூறையாடப்பட்டன. (ஆதாரம்: அன்றைய மகாராட்டிர உள்துறை அமைச்சர் மொரார்ஜி தேசாய் எழுதியுள்ள சுயசரிதை தகவல்).

தந்தை பெரியார், தமிழ்நாட்டில் மதக் கலவரமோ, பார்ப்பனர்களுக்கு ஆபத்தோ, எதிரான வன்முறையோ கிளம்பி விடாமலிருக்க பல ஊர்களில் மக்களிடையே பரப்புரை நிகழ்த்தினார். (ஆதாரம்: நன்னிலம் அருகே உள்ள சன்னாநல்லூர் பொதுக்கூட்டம் வரை "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற தலைப்பில் வந்த வெளியீடு).

தனது இயக்க இளம் பேச்சாளரை (கலைஞர்) கூடக் கண்டித்து, அமைதிக்குக் குந்தகம் ஏற்படாது தடுத்த மகத்தான மனிதநேயர் தந்தை பெரியார்!

இன அழிப்புக்காரர்களாக இருந்தவர்களை அழிப்பதற்காக, அச்சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. காரணம், அவர் மானுட நேயர் தனி மனித வெறுப்பு அல்ல அவரது கொள்கை!

### "வாழ்ந்த காந்தியார் வேறு; மறைந்த காந்தியார் வேறு!"

பிற்போக்குத் தத்துவங்களின் எதிரி அவர் என்பதைக் காட்டிதான், தக்க நேரத்தில் இஸ்லாமியர்களையும், பார்ப்பனர்களையும் வெடிக்கவிருந்த கலவர வன்முறைகளிலிருந்து பாதுகாத்தார்!

காந்தியாரை அவரது வருணாசிரம பிற்போக்கு பார்ப்பன ஆதரவுக்காகக் கண்டித்த தந்தை பெரியார், அவர் மறைவின்போது "காந்தி நாடு", "காந்தி மதம்" என்றெல்லாம் பெயரிடச் சொன்னார். தனது நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்திற்கான தக்க காரணமும் சொன்னார், இரண்டே வரிகளில்!

### கடைசி காலத்தில் காந்தியார் கூறியது என்ன?

"வாழ்ந்த காந்தியார் வேறு; மறைந்த காந்தியார் வேறு!" (1948, 'குடிஅரசு')

தேசத் தந்தையைக் கொன்றதைவிடக் கொடூரம், மதச்சார்பற்ற நாடாகத் திகழ வேண்டும் என்ற அவரது தத்துவத்தையும், அது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பீடிகை இடம்பெற்றபோதிலும், அதனைத் தலைகீழாக மாற்றி, பச்சையான ஒரு "ஹிந்துராஷ்டிரமாக" ஆக்கி வருகின்றனர் என்ற வேதனையும், வெட்கமும் வெளிச்சம் போட்டுக் காட்டும் விபரீத நிலை இன்று!

அயோத்தியில் அரசு இயந்திரம் மூலமே இராமன் கோவில் கட்டப்பட்டுள்ளது!

அது அரைகுறையாகக் கட்டி முடிக்கப்படாத நிலையிலே தேர்தலில் வாக்கு வங்கி, அறுவடைக்காக "இராமன் பிரான் பிரதிஷ்டை'யை பிரதமர் மோடி, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் ஆகியோர் செய்தனர் ஹிந்து மதத்தின் நான்கு சங்கராச்சாரியார்களின் 'சாபக் கணைகள்' ஊடுருவிய நிலையிலும்!

"இதிகாச இராமன் வேறு நான் வணங்கும் இராமன் வேறு" என்று பகிரங்கமாகக் கூறியவர் காந்தியார் அவர்கள்!

மதவெறியை மாய்த்து, மனிதநேயத்தையும் மனித குல சமத்துவத்தையும்

மலர்வளையங்கள் முக்கியமல்ல மதவெறியை வீழ்த்துவதே காந்தியாருக்குச் செய்யும் மரியாதை; ஏற்படுத்த காந்தியார் நினைவு நாளில் சூளுரைத்து, ஜனநாயகம் காக்க, மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வீறு கொள்வதே அண்ணல் காந்தியாருக்குத் தரும் உண்மை மரியாதை!

மலர்வளையங்கள் முக்கியமல்ல இதய மலர்களைக் குத்திக் கிழிக்கும் மதவெறி திரிசூலங்களைக் கீழே போட வைக்க புதியதோர் ஆட்சி வருகிற பொதுத்தேர்தலில் உருவாக "ஓட்டப்பர்களான" மக்கள் உறுதி ஏற்பார்களாக!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு ள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 13**

ம.அ.13.ந.க.எண்.சி3/1224/2023

**குறுகிய கால e-மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்கண்ட பணிக்கு மண்டல அலுவலர்-13 அவர்களால் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது:-

**2022 - 23ம் ஆண்டு தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி**

மண்டலம் - 13 பகுதி - 40, வார்டு - 169ல் சின்னமலை வெங்கடாபுரத்தில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டும் பணி

| பணியின் மதிப்பு தொகை | ஒப்ப முன் வைப்புத் தொகை |
|---|---|
| (1) ரூ.1,25,68,535.65 | ரூ.1,25,700.00 |


ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 08.02.2024 அன்று பிற்பகல் 3.00 மணி வரை
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 09.02.2024 அன்று பிற்பகல் 3.30 மணி

செ.ம.தொ.இ / 514 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**மண்டல அலுவலர் - 13**




அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலுடன் மதநல்லிணக்க உறுதிமொழி அனைத்து மதத்தினருடன் பேரறிஞர் அண்ணாசிலை அருகே கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன், துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மண்டல தலைவர் செல்வகுமார், உதவிப் பொறியாளர் சந்தோஷ், இளநிலை பொறியாளர் செல்வன் ஜார்ஜ், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஜோனா கிறிஸ்டி, திருமதி. சொர்ணத்தாய், சதீஷ் உள்பட அணி களின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் பொருநை இலக்கிய திருவிழா மற்றும் இளைஞர் இலக்கியத் திருவிழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று சாகித்ய அகாடமி விருதாளர் பொன்னீலன்,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மாநகராட்சி மேயர் சரவணன்,மாநகர காவல் ஆணையாளர் முனைவர் மூர்த்தி, பொது நூலக இயக்குனர் இளம் பகவத்,மாவட்ட வன அலுவலர் முருகன்,மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.இந்நிகழ்வில் தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழியினை அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஜன.30 மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்பு!

## த.வேணுகோபால் - எம்.எஸ்.தரணிவேந்தன் - டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் அனைத்து சமூகத்தினர் பங்கேற்பு!

திருவண்ணாமலை, பிப்.1-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், ஜனவரி 30 மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால், வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் அனைத்து சமூகத்தினர் மற்றும் அனைத்து இயக்கத்தைச் சார்ந்த நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

30.01.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், காந்தி நினைவு நாளான ஜனவரி 30ம் தேதியை மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நாளாக நடைபெற்றிட வேண்டுமென்ற தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று, பொதுப்பணித் துறை எ.வ.வேலு அவர்களின் வழிக்காட்டுதலின் படி 30.01.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணா மலை மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத் தலைவர் த. வேணுகோபால் தலைமையேற்றார்.

மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி. சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் சீனி.கார்த்திகேயன், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் ச.நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி நாசர் உசேன், கலிமுல்லா, முஸ்லீம் லீக் நவாப்ஜான், முபாரக் மற்றும் ஹாஜி எம்.இ.ஜமாலுதீன், ஏ.எல்.சி.துணைத் தலைவர் ஜேக்கப், கமல்சந்த் ஜெயின், அருணாச்சல குருக்கள், நகரமன்றத் தலைவர் நிர்மலா வேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நாள் கூட்டத்தில் காப்போம் காப்போம் மனிதநேயம் காப்போம். விலக்குவோம், விலக்குவோம் மதவெறியை விலக்குவோம், உருவாக்குவோம் உருவாக்குவோம் அனைவருக்குமான இந்தியாவை உருவாக்குவோம், வேண்டும் வேண்டும் ஒற்றுமை இந்தியா வேண்டும் போன்ற பல்வேறு முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

அடுத்து வருகைத் தந்த பங்கு தந்தை மற்றும் அருட்சகோதரிகள், இஸ்லாமிய பெருமக்கள், வர்த்தகர் சங்க நிர்வாகிகள், லயன் சங்க நிர்வாகிள், ரோட்டரி சங்க நிர்வாகிகள், ஜெயின் சங்க நிர்வாகிகள், சிவாச்சாரியர்கள், ரெட்கிராஸ் மற்றும் பொது நல அமைப்புகள், தோழமை இயக்க நிர்வாகிகள் அனைவருக்கும் சால்வை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

அடுத்து மதநல்லிணக்க உறுதி ஏற்பு நாளை முன்னிட்டு, உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அன்பைவாழ்க்கை அறநெறியாக கொண்டும், மனித நேயத்தை நடைமுறை வழியாகக் கொண்டும் வாழ்வேன், மதவெறியை விலக்கி மதநல்லிணக்கம் பேணுவேன், வேற்றுமையில் ஒற்றுமைக்காணும் இந்திய சமூகத்தில் வேற்றுமையை விதைக்கும் அனைத்து நச்சுக் கருத்துக்களையும் அணுவளவும் ஏற்கமாட்டேன், அனைவரிடமும் நல்லிணக்கம் பேணுவேன், மானுடம் போற்றுவேன் என உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜியலட்சுமி ரமேஷ்,

வடக்கு மாவட்ட நிர்வாகிகள் கே.ஆர்.சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ந. பாண்டுரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, டி.ஏ. தட்சணா மூர்த்தி, எஸ்.எஸ். அன்பழகன்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரி முத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி. சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த. மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ. கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி. கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன், பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப. முருகையன், மு. அன்பழகன், எம்.சீனுவாசன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ. ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, கு.கணேஷ், விஜி (எ) எஸ்.விஜயராஜ், ப.அண்ணாமலை, சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ். முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன்ஶ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, நகர மன்றத் துணைத் தலைவர் சு.ராஜாங்கம்.

ம.தி.மு.க.வைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, மாணிக்கவாசகம், நாகராஜன், சரவணன், முஸ்லீம் லீக் ஜாகீர் உசேன்இ ஷாஜகான், ஷேக்முபாரக், மனிதநேய மக்கள் கட்சி, ஏ.ஆர்.நாசர் உசேன், முஜ்ஜீப் பாஷா, அன்சர், ஷாகீர் உசேன், எக்ஸ்னோரா ப.இந்திர ராஜன், வர்த்தகர் சங்கம் ரவிச்சந்திரன், டி.எம்.சண்முகம், சாந்தி சுவல்லர்ஸ் விஜயக்குமார், கியூபர்ட் தனசுந்தரம், ஏ.சாமூவேல், கே. கஜேந்திரன், பங்குத் தந்தை ஞானஜோதி, வேளாங்கண்ணன், சிஸ்டர் சிசிரி, அல்போன்சா, சாந்தி, ஜோதி, சேரியா, ரோட்டரி சங்கம் கே.எல். வின்சென்ட், சங்கர், பாண்டு, ஆனந்த், சிவாச்சாரியார்கள் அசோக்குமார் குருக்கள், ஹரிகரன் குருக்கள், சபரி குருக்கள், கீர்த்திவாசன் குருக்கள் மற்றும் நகர நிர்வாகிகள் சி. சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ந.சீனுவாசன், ஜீவரேகாவிஜயராஜ், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு. பிரபு, ஹக்கீம்சேட் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறினார்.

### ஆளுநர் ரவியை கண்டித்து

# சிவகங்கையில் காங்கிரசார் ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை. பிப். 1-

சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் சிவகங்கை நகர் காந்தி சாலை முன்பாக ஆளுநர் ரவி மகாத்மா காந்தி குறித்து தவறாக பேசியதை கண்டித்து மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் பேசியதை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, நகர, நிர்வாகிகள் சண்முக ராஜன், மாரிமுத்து, விஜய் தியாகராஜன், சோனை மதியழகன், உட்பட ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ் மொழிக்காக அரும்பாடுபட்ட மொழிப்போர்த் தியாகிகளின் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமையில், நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கவிச்சுடர் கவிதைப்பித்தன், ஆக்காட்டி ஆறுமுகம்,கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே .கார்மேகம், ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான், இராமநாதபுரம் நகர் மன்ற துணைத் தலைவர் பிரவீன் தங்கம்,செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பி, இராமநாதபுரம் ஒன்றியம் பெருந்தலைவர் கே.டி.பிரபாகரன், ஒன்றிய செயலாளர் உதயகுமார், முத்துக்குமார், ராஜா ராம் மற்றும் ரவிச்சந்திரன், ராம வன்னி மாணவர் அணி அமைப்பாளர் சுரேஷ் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ஜே.பிரவீன் ஏற்பாடு செய்திருந்தார்.



தூத்துக்குடி தங்கம்மாள் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்புத் திட்ட முகாமை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி பெ.கீதாஜீவன் பார்வையிட்டு மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட “நிர்வாகிகள் சந்திப்பு” கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, “அண்ணா அறிவாலயத்தில்” நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### பேரறிஞர் அண்ணா 55வது ஆண்டு நினைவு தினம்

# அறந்தாங்கியில் அமைதி ஊர்வலம்!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை, பிப்.1-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி தந்த காவிய தலைவர். உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளினையொட்டி வருகின்ற 3.2. 2024 சனிக்கிழமை காலை 9 மணியளவில் அறந்தாங்கி புதிய பேருந்து நிலையத்தி லிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று பேரறிஞர் அண்ணா சிலைக்கு எனது (எஸ்.ரகுபதி) தலைமையிலும், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணை பெருந்தலைவர்கள், மாவட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் க.ராஜேந்திரன் செய்துள்ளார்.



தாய்லாந்தில் 27.01.2024 அன்று நடைபெற்ற உலக அளவிலான சிலம்பப் போட்டியில் ஒற்றைக்கம்பு பிரிவில் கோவில்பட்டியைச் சேர்ந்த 6ம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவி இளநங்கை தாரகை முதலிடமும், சிலம்பம் தொடு முறை பிரிவில் கல்லூரி மாணவன் பூவரசன் முதலிடமும் பிடித்துள்ளதை அறிந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் நேரில் அழைத்து பாராட்டி ஊக்கத்தொகை வழங்கி வாழ்த்தினார்கள். ஆற்றங்கரை ஊராட்சி மன்றத் தலைவர் சீதாராமன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தேனி மக்களவைத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளுடன், கழக நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக்குழுவின் சார்பில் – சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஒருங்கிணைப்புக் குழுவினரான – கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் தங்கம்தென்னரசு, பி.மூர்த்தி, மாவட்டச் செயலாளர்கள் கம்பம் இராமகிருஷ்ணன், தங்க தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



இராமநாதபுரம், கடலூர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளுடன், கழக நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக் குழுவின் சார்பில் – சென்னை அன்பகத்தில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஒருங்கிணைப்புக் குழுவினரான – கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் எ.வ.வேலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம்தென்னரசு, கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மேற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி, இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### ரூ.9.21 கோடி மதிப்பீட்டில்

# கடலூர் மாவட்டத்தில் 29 புதிய மருத்துவக் கட்டடங்கள்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - மா.சுப்பிரமணியன் - சி.வெ.கணேசன் திறந்து வைத்தனர்!

கடலூர், பிப். 1 -

கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் பல்வேறு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் புதிய கட்டிடங்களை வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்தனர். மேலும், சிதம்பரம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஆய்வுக்கூட கட்டிடத்தை திறந்து வைத்ததோடு, ரூ.18 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட அதி தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்திற்கும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர்.

மேலும், ஆயங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலை யத்தில் ரூ.48 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவு கட்டிடத்தையும், வடலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பொது சுகாதார கட்டிடத்தையும், ஒரத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தையும் மற்றும் திருவந்திபுரம், வடக்குத்து, கம்பளிமேடு ஆகிய 3 இடங்களில் தலா ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள துணை சுகாதார நிலைய கட்டிடத்தையும், கட்டியங்குப்பம் பகுதியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள துணை சுகாதார நிலைய கட்டிடத்தையும், குருவப்பன்பேட்டை, காணூர், வேலங்கிபட்டு ஆகிய 3 இடங்களில் தலா ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள துணை சுகாதார நிலைய கட்டிடத்தையும் என ஆக மொத்தம் ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள புதிய மருத்துவ கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

அமைச்சர்கள் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமாக விளங்கக்கூடிய மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் வாயிலாக 45 வயதுக்கு மேற்பட்ட இரத்த அழுத்த நோயாளிகளின் வீடுகளுக்குத் நேரில் சென்று சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கப்படுகிறது. கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் போன்ற திட்டங்களால் உயிரிழப்புகள் குறைந்து வருகிறது என தெரிவித்தார். மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் இதுவரை 1,72,625 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். தொடர் சேவை என்ற வகையில் 3,71,47,966 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டத்தின்கீழ் இதுவரை 2,12,965 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டு 25 கிராமப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களும், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் அமைக்க தீர்மானித்ததில் புவனகிரி வட்டம், மஞ்சக்கொள்ளை பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், ஒரங்கூர் ஆரம்ப சுகாதார நிலையமும் அமையவுள்ளது. முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி தமிழ்நாட்டில் மருத்துவர், செவிலியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் என்கின்ற வகையில் 4 பணியாளர்களை கொண்ட 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதில் கடலூர் மாநகராட்சியில் 6 நலவாழ்வு மையங்களையும், சிதம்பரம் நகராட்சியில் 1 நலவாழ்வு மையமும், நெல்லிக்குப்பம் நகராட்சியில் 1 நலவாழ்வு மையமும், பண்ருட்டி நகராட்சியில் 1 நலவாழ்வு மையமும், விருத்தாசலம் நகராட்சியில் 1 நலவாழ்வு மையமும் என கடலூர் மாவட்டத்தில் 10 இடங்களில் அனுமதிப்பட்ட நிலையில் கடலூர் மாநகராட்சியில் கட்டிமுடிக்கப்பட்ட 3 நலவாழ்வு மையமும், பண்ருட்டி நகராட்சியில் 1 நலவாழ்வு மையமும், விருத்தாசலம் நகராட்சியில் 1 நலவாழ்வு மையமும், சிதம்பரம் நகராட்சியில் 1 நலவாழ்வு மையமும் கடந்த 06.06.2023 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 2,286 ஆகவும், துணை ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 8,713 எனவும் உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறந்த கட்டமைப்பை பெற்ற நிலையங்களுக்கு 2012 முதல் தேசிய தர நிர்ணய திட்ட விருதுகள் வழங்கப்பட்டதில் இதுவரை (12 ஆண்டுகள்) தமிழ்நாட்டில் இருந்து மட்டுமே 614 விருதுகள் பெறப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்னரே 545 விருதுகள் கிடைக்க ப்பெற்றன. இதில் கடலூர் மாவட்டம் மட்டுமே அதிகபட்சமாக 25 விருதுகள் பெற்றுள்ளன. கடலூர் தலைமை அரசு மருத்துவமனை, சிதம்பரம் அரசு மருத்துவமனை, விருத்தாசலம் அரசு மருத்துவமனை, டிநெடுஞ்சேரி ஆரம்ப சுகாதார நிலையம், சிறுப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், நெல்லிக்குப்பம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், விருத்தாசலம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், கெங்கை கொண்டான் ஆரம்ப சுகாதார நிலையம், கடலூர் துறைமுகப் பகுதயில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், புதுப்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், மதலப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம், மனம்தவிழ்ந்தபுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம், மேல்பட்டாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், ஆவட்டி ஆரம்ப சுகாதார நிலையம், மங்கலம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம், காரைக்காடு சமுதாய ஆரம்ப சுகாதார நிலையம், அரசக்குழி ஆரம்ப சுகாதார நிலையம், குண்டியமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம், கீரனூர் ஆரம்ப சுகாதார நிலையம், கிள்ளை ஆரம்ப சுகாதார நிலையம், திருவந்திபுரம் ஆரம்ப சுகாதார நிலையம், தூக்கணாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், கீழ்அருங்குணம் ஆரம்ப சுகாதார நிலையம், வடலூர் சமுதாய சுகாதார நிலையம் என்ற நிலையங்களும் விருதுகள் பெற்றுள்ளன.

பிறப்பு விகிதம் இந்திய அளவிலான சுகாதாரக் குறியீடு 19.5 என்ற நிலையில் தமிழ்நாட்டின் சராசரி 13.8 என உள்ளது. கடலூர் மாவட்டம் 8.9 என்ற அளவில் சராசரி உள்ளது. அதே போல் இறப்பு விகிதம் இந்திய அளவிலான சுகாதாரக் குறியீடு 6 என்ற நிலையில் தமிழ்நாட்டின் சராசரி 6.1 எனவும் அதில் கடலூர் மாவட்டம் 3.3 என்ற அளவில் சராசரி உள்ளது. பிறப்பின் போது குழந்தை இறப்பு விகிதம் இந்திய அளவிலான சராசரி 28 என்ற நிலையில் தமிழ்நாட்டின் சராசரி 13 என பாதியாக உள்ளது. கடலூர் மாவட்டத்தில் குழந்தை இறப்பு சராசி 7.3 என்ற வகையில் சிறப்பாக செயலாற்றி வருகிறது என தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனை ச் செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், அரசு கடலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மற்றும் சிறப்பு அதிகாரி மரு.சி. திருப்பதி, இணை இயக்குநர், மருத்துவம் நலப்பணிகள் மரு.ஹீரியன் ரவிக்குமார், துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு. ஆ.கீதாராணி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சுகாதார துறை அலுவலர்கள் உள்ளனர்.

### சென்னை விமான நிலையத்தில்

# சுங்கத் துறை அதிகாரிகள் 40 பேர் மாற்றம்!

சென்னை, பிப்.1–

சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் சுங்கத் துறை அதிகாரிகள் 40 பேர் அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நாற்பது அதிகாரிகளும் கடந்த இரண்டு ஆண்டுகளாக பணிபுரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மத்திய நிதி அமைச்சக உத்தரவின் பேரில் அதிரடியாக பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்ட 40 அதிகாரிகள் நேற்று முன்தினம் (ஜன.30) சென்னை பன்னாட்டு விமான நிலையம் வந்தனர்.

இவர்கள் பணியாற்றும் இடம், பயணிகளைக் கையாளுவது மற்றும் புறப்பாடு பகுதியில் வருகைப் பகுதியில் எவ்வித சோதனைகள் செய்தல் உள்ளிட்டவை உயர் அதிகாரிகள் மூலம் அறிவுறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் நேற்று முன்தினம் (30.01.2024) கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் 29 மருத்துவ கட்டிடங்கள் ரூ.9.21 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் இராஜசேகரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சுகாதார துறை அலுவலர்கள் உள்ளனர்.

### புதுடெல்லியில் குடியரசு தின அணிவகுப்பில்

# தமிழ்நாடு அலங்கார ஊர்திக்கு மூன்றாம் பரிசு!

## அலங்கார வாகன கலைக்குழுவினருக்கு முதலிடம்!

புதுடெல்லி, பிப். 1-


புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணி வகுப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடுமாநிலஅலங்கார வாகனத்திற்கு மூன்றாமிடம்மற்றும்அலங்கார வாகன கலைக் குழுவினருக்கு முதல் இடம் கிடைத்துள்ளது.

புதுடெல்லியில் 2024 ஜனவரி 26 அன்று நடைபெற்ற குடியரசு தின விழா அணி வகுப்பின்போது பங்கு கொண்ட தமிழ்நாடு மாநில அலங்கார வாகனத்திற்குமிகச்சிறந்தஅலங்கார வாகனத்திற்கான மூன்றாமிடத்துக் கான விருதினை இந்தியபாதுகாப்புஅமைச்சகம் அறிவித்தது.

நேற்று முன்தினம் (30.01.2024) புதுடெல்லி இராணுவ கன்டோன் மெண்டில் அமைந்துள்ள ராஷ்ட்ரியரங்க்சாலாமுகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர்அஜய்பட்தமிழ்நாடு மாநிலத்திற்கு மிகச்சிறந்தஅலங்காரவாகனத்திற்கான மூன்றாமிடத்துக் கானவிருதுமற்றும்பாராட்டுப் பத்திரத்தினை வழங்கினார்.

இவ்விருதினை தமிழ்நாடு அரசின் சார்பாகதமிழ்நாடு அரசின் முதன்மை உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் சாட்டர்ஜி பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில், ஒன்றிய பாதுகாப்பு அமைச்சக இணைச் செயலாளர் அமிதாப்பிரசாத், இயக்குநர் எம்.பி.குப்தா ஐ.டி.எஸ். மற்றும் சார்புச் செயலாளர் அசோக் பாண்டே ஆகியோர் உடனிருந்தனர்.

மேலும், கடந்த 21.01.2024 அன்று குடியரசு தின விழா அணி வகுப்பில் பங்குபெறும் 16 மாநிலங்களுக்கிடையே புதுடெல்லி ராணுவ வளாக ராஷ்ட்ரிய ரங்க் சாலா முகாமில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு அலங்கார வாகனகலைகுழுவினருக்கு முதல் இடத்திற்கான விருது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் ஜவுளிப் பூங்காக்கள்.**



# இடம் பொருள் கலைஞர் 55






# ஜவுளிப் பூங்காக்கள்

## தொழில் முன்னேற்றத்தின் 360 டிகிரி பார்வை!

‘ஆள் பாதி, ஆடை பாதி’ என்பார்கள். அணிந்திருக்கிற ஆடையை வைத்து மனிதர்களை எடைபோடும் வழக்கம், தொன்றுதொட்டு இருந்து வருகிறது. காலத்துக்கேற்றபடியும், இடத்துக்கு ஏற்றபடியும் உடை அணியாமல் போனால், பல வாய்ப்புகளை நழுவ விட்டுவிடுகிற சூழல் ஏற்படக் கூடும். அதனால்தான் மனிதர்களின் மிக அடிப்படையான தேவைகளின் வரிசையில், உணவுக்கு அடுத்து உடையை வைத்தார்கள், பொருளாதார மேதைகள்.

தமிழ்நாட்டில் உழவுக்கு அடுத்து மிக அதிகமானோர் சார்ந்திருக்கும் தொழில் என்றால், அது ஜவுளித் தொழில்தான். கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு, ஆயத்த ஆடை என பலவாறாக ஜவுளித் துறை செழித்திருக்கும் மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு. விவசாயம், வாகனம், கட்டுமானம் என தொழில்நுட்பம் சார்ந்த ஜவுளித் தயாரிப்பு மட்டும் இங்கே 12 வகைகளாக இருக்கின்றன.

கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல் ஆகிய மேற்கு மாவட்டங்கள் தவிர, மதுரை, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களும் ஜவுளித்துறையில் அழுத்தமாகக் கால்பதித்துள்ளன. ஜவுளித் துறையில் தமிழ்நாடு காட்டும் ஈடுபாட்டால்தான், இந்தியாவால் வங்கதேசத்துடன் இந்தத் தொழிலில் போட்டியிட முடிகிறது.

இப்படிப்பட்ட ஜவுளித் துறைக்கு, இந்தியாவி லேயே முதன்முதலாக தமிழ்நாட்டில்தான் 1997 இல் ‘ஜவுளிக் கொள்கை’, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது ஆட்சியில் கொண்டு வரப்பட்டது.

### நவீன ஜவுளிப் பூங்காக்கள்

2005 ஆம் ஆண்டு வரை கலைஞர் அவர்கள், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்துக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி, சேலைகள் மட்டுமே இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தில் வழங்கப்படும் என்று மாற்றம் கொண்டு வந்தார். மேலும், இலங்கைத் தமிழ் அகதிகள், முதியோர் உதவித் தொகை பெறுவோர் ஆகியோருக்கும் அந்தத் திட்டத்தை விரிவாக்கினார்.

இதுதவிர, நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம், காப்பீட்டுத் திட்டம், ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் நல வாரியம் எனப் பல முன்னெடுப்புகளை கலைஞர் அவர்கள் மேற்கொண்டார். இந்த சமயத்தில்தான், 2005 இல் ஒன்றிய அரசு, ஜவுளித் தொழிலின் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு, ஜவுளித் தொழிலில் உலகத் தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும் வகையில் ‘ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

எப்போதும் புதிய தொழில்நுட்பங்களையும், நவீன முயற்சிகளையும் வரவேற்று ஆரத்தழுவிக் கொள்ளும் கலைஞர், ஜவுளித் துறையை மேம்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைதான், ஜவுளித் தொழில் கொழிக்கும் பகுதிகளில் ஜவுளிப் பூங்காக்களை ஏற்படுத்தியது..!

ஒன்றிய அரசு அறிமுகப்படுத்திய திட்டத்தை, சற்றும் தாமதிக்காமல் அதை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார் கலைஞர். அதன் பலனாக, 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை, ‘குமாரப்பாளையம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா’

கடலூர் ‘சைமா’(SIMA) பதனிடும் பூங்கா, ‘தேனி வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா’, ‘காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு கைத்தறிப்பட்டுப் பூங்கா’, ‘ஈரோடு விசைத்தறி பெருங்குழுமம்’ ஆகிய 7 திட்டங்களுக்கு ரூ.814.50 கோடி திட்ட மதிப்பில் ரூ.28.54 கோடி அரசு மானியத்துடன் ஏறத்தாழ 1,46,200 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்தது.

**அண்ணாவுக்கு காஞ்சியில்... தம்பிக்கு ஆரணியில்...!**

2009 செப்டம்பர் 26 அன்று, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவின் போது, காஞ்சிபுரத்தில் வசிக்கும் பட்டு நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ‘காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா’ அமைக்கப்படும் என்று அறிவித்தார். இது இந்தியாவின் இரண்டாவது கைத்தறி பூங்காவாகும்.

இப்போது இந்த ஆண்டு தனது நூற்றாண்டைக் கொண்டாடும் ‘தம்பிக்கு’, ‘கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா’ ஒன்று, ஆரணியில் அமைக்கப்படும் என்று ‘திராவிட மாடல் அரசு’ அறிவித்துள்ளது.



### மனிதவளத்தைப் பெருக்குதல்

ஜவுளிப் பூங்காக்களைக் கொண்டு வந்ததுடன், கலைஞர் நின்றுவிடவில்லை. இந்தத் துறையில் வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர் திட்டங்களைத் தீட்டினார். இந்தியாவில் ஆடை அலங்காரத் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக, ஒன்றிய ஜவுளி அமைச்சகத்தின் ‘தேசிய ஆடை அலங்காரத் தொழில்நுட்ப நிறுவனம்’ (நேஷனல் இன்ஸ்டியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி) ஏற்கெனவே, சென்னையில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், நாட்டின் ஜவுளி வரைபடத்தில் கோவை மாவட்டத்துக்கு உள்ள முக்கியத்துவத்தைக் கருதி, அந்த அமைச்சகம், தமிழ்நாட்டில் தனது இரண்டாவது கிளையை ரூ.20 கோடி திட்ட மதிப்பில் கோவையில் அமைக்கத் தொடங்கியது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட கலைஞர், அந்தத் திட்டத்துக்கு முதல் தவணையாக ரூ.5 கோடியை 2010 செப்டம்பர் 30 அன்று வழங்கினார்.

### சுற்றுச்சூழலுக்கு முக்கியத்துவம்

ஜவுளித் துறையில் நவீனத்தைப் புகுத்த ஜவுளிப் பூங்காக்கள், அந்தத் துறையில் மனித வளத்தைப் பெருக்க கல்வி நிறுவனம் ஆகியவற்றோடு, அந்தத் தொழிற்சாலைகளால் ஏற்படும் சூழல் மாசுபாட்டைக் குறைக்கவும் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டது கலைஞர் அரசுதான்.

பின்னலாடைத் தொழிலில் முக்கியப் பங்கு வகிக்கும் திருப்பூர் உள்ளிட்ட நகரங்களில் இருக்கும் சாயத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் மாசுபட்ட சாயக் கழிவுநீரைச் சுத்தி கரிக்க, முதன்முதலில் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அடித்தளமிட்டது கலைஞர்தான். அந்தத் திட்டத்துக்காக ரூ.120 கோடி நிதியுதவி வழங்கப்படும் என்று கலைஞர் அறிவித்தார். அத்துடன் நில்லாமல், அவர் கொடுத்த அழுத்தம் காரணமாக அன்றைய ஒன்றிய நிதியமைச்சர் 2010-2011 நிதிநிலை அறிக்கையில், இந்தத் திட்டத்துக்காக தமிழ்நாட்டுக்கு ரூ.200 கோடி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதேபோல, இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சுத்திகரிக்கப்பட்ட சாயக் கழிவுநீரினை 350 கிலோ மீட்டர் நீளத்துக்குக் குழாய் மூலம் கொண்டு சென்று கடலில் கலக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கலைஞர் அவர்கள் அறிவித்து, தேசிய கடல்சார் நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகள் மூலம் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும், முதல் தவணையாக ரூ.1.25 கோடியை ஒதுக்கினார்.

இவ்வாறு, ‘ஜவுளிப் பூங்கா’ என்று தொழில் துறையை பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு மட்டும் வளர்க்காமல், அதனுடன் இணைந்த மனிதவளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றையும் 360 டிகிரி கோணத்தில் யோசித்ததால்தான் நாம் கலைஞரை, ‘நவீன தமிழ்நாட்டின் சிற்பி’ என்று அழைக்கிறோம்..!

...வலம் வருவோம்

## ‘ராம ராஜ்ஜியத்தில்’ பெண்களின் பாதுகாப்பு?

‘அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டிவிட்டோம்’ என ஆர்ப்பரிக்கும் பா.ஜ.க.வினர், அயோத்தி அமைந்திருக்கிற மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் பெண்களின் பாதுகாப்பு நிலை என்னவாக இருக்கிறது என்பதைப் பற்றி விவாதிக்க முன்வர வேண்டும்.

தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் நாட்டிலேயே உத்தரப் பிரதேசத்தில்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிக அதிகமாக நடந்திருக்கின்றன. கொலை, கொள்ளை, கடத்தல், பாலியல் வன்கொடுமை, கூட்டுப் பாலியல் வன்கொடுமை என 65,743 சம்பவங்கள் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

இது 2020 ஆம் ஆண்டில் 49,385 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 56,083 ஆகவும் இருந்திருக்கின்றன. பா.ஜ.க. சாமியார் யோகி ஆதித்யநாத் ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டு தான் இருக்கின்றன என்பதை, ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே காட்டுகின்றன.

அதேவேளையில் இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான நகரமாக சென்னை இருக்கிறது என்பதையும் தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் உறுதி செய்கின்றன. 2022 ஆம் ஆண்டில் சென்னையில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 736 வழக்குகள் மட்டுமே பதிவாகியிருக்கின்றன. முந்தைய ஆண்டில் இந்த எண்ணிக்கை 874-ஆக இருந்திருக்கிறது.

## :.ப்ளாஷ்பேக்



### கைகொடுக்கும் படம்!

1977 ஆம் ஆண்டு முதல் கழகப் பணியில் என்னை ஈடுபடுத்திக்கொண்டாலும், தலைவர் கலைஞர் அவர்களுடன் 1986-இல் தான் முதன்முதலாகப் புகைப்படம் எடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது, நான் ஈரோடு 11-வது வட்ட தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளராக இருந்தேன். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரி மாணவர்களிடமும், ஆசிரியர் பெருமக்களிடமும் அண்ணா அறிவாலயம் கட்டட நிதியாக பத்தாயிரம் ரூபாயை வசூலித்து, மாவட்டக் கழகத்தில் வழங்கினேன். அதற்கான சான்றிதழ் ஒன்றை தலைவர் கலைஞர் வழங்கினார். அப்போது, ‘நான் உங்களுக்கு கை கொடுப்பது போல் புகைப்படம் எடுக்க விரும்புகிறேன்’, எனக் கேட்டு, அவரும் ‘சரி’ எனச்சொல்லி எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.



செந்தில்குமார்

**-ஆ.செந்தில்குமார்,**
**மாவட்டத் துணைச்செயலாளர்,**
**ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கொடியேற்று விழாக்கள்!

**1954, 1955 ஆம் ஆண்டுகளில் திருச்சியில் கழகத்தின் வளர்ச்சி நெருக்கடியாக இருந்தது. அண்ணா வருந்தினார். கூட்டம் நடத்துவதற்கு அழைத்தவர்களிடம் ‘கலைஞரை வைத்து கூட்டம் நடத்தி, கழகத்துக்கு உயிர் இருப்பது தெரிந்தால், வருகிறேன்’ என அனுப்பி வைத்தார். அடுத்தடுத்த வாரங்களில் திருச்சியில் 50 இடங்களில் கலைஞர் கொடியேற்றி, ஐந்தாறு கூட்டங்களில் பேசினார். கலைஞரை வாகனம் ஒன்றில் வைத்து 50 இடங்களுக்கு ஊர்வலம் விட்டனர். மற்ற ஊர்களுக்கும் அது பரவியது. சேலத்தில் 60 கொடி, கோவையில் 70 கொடி என அடுத்தடுத்து நிகழ்ச்சிகள் ஏற்பாடாகின. கொடியேற்று விழாக்கள் புதிய பிரச்சார உத்தி ஆயிற்று.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 375




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.